1969 மார்ச் 14]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே நிதித் துறையிலே மட்டும்தான் இந்த முறை அமல்படுத்தப்படுகிறது, அதன்மூலம் ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொன்னார்கள். மற்றத் துறைகளிலும் எப்போது அமல்படுத்தப்படும்? தலைமைச்செயலகத்தைத் தவிர வேறு துறைகளிலும் எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிதித் துறையைப் பொறுத்தவரை இந்தச் சீரமைப்பு வசதியாக இருக்கிறது. நிதித் துறையில் கோப்புகளில் கருத்து அறிவிப்பு செய்வது மாத்திரம்தான் அவர்கள் வேலையாக இருக்கிறது. ஆனால் வேறு பல துறைகளில் பல பேர்கள் கைக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. மற்றத் துறைகளில் அந்தச் சங்கடம் இருக்கிற காரணத்தால் எல்லாத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்த இயலாது.

Minister's visit to Mauritius Island.

* 285 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Hon. the Minister for Health and Harijan Welfare paid a visit to Mauritius Island ; and

(*b*) if so, when and for what purpose ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மோரிஷஸ் தீவின் மக்களின் அழைப்பிற்கிணங்க மாண்புமிகு ஹரிஜனநல செய்தித்துறை அமைச்சர் 1968 ஜூனில் அத்தீவிற்கு கலாச்சார முறையில் சென்றுவந்தார்.

திரு. கே. விநாயகம்: அப்படி அழைப்பின்பேரிலே போன அமைச்சர் அவர்கள் அங்கிருந்து எதைக் கற்றுக்கொண்டு வந்தார்கள்? எந்த அனுபவத்தை இங்கே கொண்டு வந்தார்கள்? அந்த முறைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு, அவைகள் நல்லவைகளாக இருந்தால், முதல் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதையும் கற்றுக்கொண்டு வர வில்லை. ஆனால் அவர்கள்தான் தமிழ் கற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக இங்கிருந்து ஆள் வேண்டுமென்று சொன்னதாகக் கேள்வி.

Students Anti-Hindi Agitation Council.

* 286 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Students Anti-Hindi Agitation Council of Madurai had decided to disregard the National Anthem and National Solidarity Pledge ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன? தேசீய கீதத்தை அவமதிப்பவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசிய கீதம் பாட மறுத்தவர்களுக்கும் அதைத் தடுப்பவர்களுக்கும், உறுதிமொழி எடுக்காதவர்களுக்கும், தண்டனைக் கொடுப்பதற்குச் மத்திய சட்டத்திலோ, மாநில சட்டத்

திலோ இடம் இல்லை. கொடி எரிப்புப் போன்றவைகளுக்குத்தான் தண்டனைக் கொடுப்பதற்கு சட்டம் இருக்கிறது. தேசீய கீதத்தை அவமதித்த் தடுப்பதற்குச் சட்டம் இல்லை. இதோடு நிறுத்திக் கொண்டால் அச்சம் இருக்கும் என்பதால் நான் விரிவாக சொல்ல விரும்புகிறேன். பள்ளி மாணவர்கள் இதுபோன்ற விஷயத்தில் சரியாக இல்லையென்றால் கல்வி அதிகாரிகள் எஜுகேஷன் ரூல்ஸ்படி அவர்களிடம் இருந்து எக்ஸ்ப்ளனேஷன் கேட்கலாம். அவர்கள் கொடுக்கிற சமாதானம் சரியாக இல்லையென்றால் அவர்களை டிஸ்மிஸ் செய்யலாம், அல்லது வேறு பள்ளிகளுக்கு டி.சி. கொடுத்தனுப்பலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஒருமைப்பாடு என்ற பெயரின் மூலம் இந்திமொழி ரேடியோ மூலமும், இந்திபிரசாரசபை மூலமும் திணிக்கப்படுகிறது. ஒருமைப்பாடு என்பது ஒரு மொழியின் ஆதிக்கம் என்ற உணர்வு மாணவர்களிடையே தோன்றியதால்தான் தீர்மானம் நிறைவேறியது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த உணர்வு நம்மால் உணரத் தக்கதுதான். அவர்கள் எடுக்கின்ற முடிவுகளின் விளைவுகளைப்பற்றித் தான் நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோம்.

திரு என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேசீய கீதம் வங்க மொழியிலேதான் பாடவேண்டுமென்றிருக்கிறது. அப்படியில்லாமல் தமிழ் மொழிப்பெயர்ப்பில் பாடப்படுகிறது. அண்மையில் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் அம்மாதிரி பாடப்பட்டது. அப்படிப் பாடுவதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறவரையில், இப்பொழுது இருக்கிற வங்க மொழியில் பாடப்படுவதுதான் சிறந்தது.

திரு. ந. வீராசாமி : இத்தகைய கீதம் ஒவ்வொரு நிகழ்ச்சி இறுதியிலும் பாடப்படுகிறதா ? சினிமாக்களுக்குச் சென்றால், முதல் ஷோ முடிந்த உடனேயும், இரண்டாவது ஷோ முடிந்த உடனேயும், மூன்றாவது ஷோ முடிந்த உடனேயும் பாடப்படுகிறது. அப்படிப் பாடுவதால் அதற்கு மதிப்பு இல்லாதததுபோல் இருக்கிறது. ஆகையால் மூன்றாவது ஷோ முடிவிலே பாடச்செய்வதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதல் ஷோவுக்கு வருகின்ற மக்கள் மூன்றாவது ஷோ கடைசிவரையிலும் இருந்து செல்வதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: தேசீய ஒருமைப்பாடு என்றால் ஒரு மொழியின் ஆதிக்கம் என்ற எண்ணம் இருப்பதாக ஓர் உறுப்பினர் கூறினார்கள். ஆனால், தேசீய கீதம் வங்காள மொழியில்தான் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதை நான்கு நாட்களுக்கு முன்பு இங்கு நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. போஜன்: சினிமாக் கொட்டகைகளில் தேசீயகீதம் பாடும்போது ஜனங்கள் அதை மதிக்காமலே வெளியேறுகிறார்கள். ஆகையினால், படம் ஆரம்பிப்பதற்கு முன்னால் தேசீயகீதத்தைப் பாட வைக்கும்படியாக ஒரு ஆலோசனை கூறப்படுமா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தேசீய கீதத்தை மதிப்பதற்கு மக்கள் பழகிக்கொள்ளவேண்டுமே தவிர, அதை அவர்கள்மீது திணித்துத் தீர வேண்டும் என்ற நிலையிலே நாம் இல்லை.

69 மார்ச் 14]

திரு. பி. எஸ். மணியன்: மதுரையில் மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் குழுவில் இத்தகைய தீர்மானங்களைக் கொண்டு சென்று தேசிய மாணவர் கள் என்று சொல்லிக்கொண்டு இருவர் அக்குழுவிலிருந்து நீக்கப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுதுதான் வந்தது.

திரு ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, சினிமாத் தியேட்டர்களில் படத்தின் கடைசியில் தேசியகீதம் பாடப்படும்போது, பெரும்பாலானவர்கள் வீட்டுக்குப்போகவும், பஸ்களில் இடம் பிடிக்கவும் அவசர அவசரமாக வெளியேறிவிடுகிறார்கள். இதன் காரணமாக, பக்தவத்சலம் சர்க்கார் சினிமாத் தியேட்டர்களில் படம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தேசியகீதம் பாடப்படவேண்டும் என்று உத்தரவு அனுப்பியிருப்பது அரசுக்குத்தெரியுமா? இன்னும், பல தியேட்டர்களில் தேசியகீதம் பாடப்பட்டு அதற்குப் பிறகுதான் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு பேசும்போது, தேசியகீதத்திற்குப் பிறகு நிகழ்ச்சிகளே இருக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார். எனவே, சினிமாத் தியேட்டர்களில் தேசியகீதம் பாடுவதுபற்றிப் பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: படம் ஆரம்பிப்பதற்கு முன்னாலே தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்று பழைய அரசில்—காங்கிரஸ் அரசில்—ஒரு உத்தரவு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி எனக்கு ஏதும் தகவல் இல்லை.

திரு. கே. விநாயகம்: நமது மொழிக் கொள்கை எதுவாயிருப்பினும், அந்தக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஆட்சியாளர்களுக்கு எவ்வித மான தடையும் ஏற்படாமல் இருப்பதற்கும், அதே நேரத்தில் தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும், தேசியகீதம் அவர்கள் எந்த மொழியை எதிர்க்கிறார்களோ அந்த மொழியில் இல்லாததன் காரணமாகவும், நமது அரசு "ஆண்டி இந்தி அஜிடேஷன் கவுன்சில்" இல் உள்ளவர்களுக்கு அவர்கள் போகிற போக்கு சரியானதல்ல, நமது நாட்டின் ஒற்றுமைக்கு உகந்ததல்ல என்றும், ஆட்சியாளர்கள் நிரந்தரமாகவே அவர்களுடன், ஒத்துழைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லித் திருத்துவதற்கான முயற்சியை இனிமேலாவது செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்றையதினம் இதுபற்றிக் கேட்கப் பட்ட கேள்விகளும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விடைகளுமே மாணவர் களுக்கு நல்ல விளக்கமாக அமையும் என்று கருதுகிறேன்.

High-yielding paddy varieties.

* 324 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether the high-yielding paddy variety like ADT. 27, TN. 1, IR. 8 and Co. 25 are tried in Chingleput district ; and

(*b*) if so, when, where and the number of acres of land in which such experiments were tried ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.